**MINUTES OF PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED PROJECT OF M/s. K.SUGAN ROUGH STONE AND GRAVEL QUARRY, SF.NO. 902/1 AND 903/1, NATHIKUDI VILLAGE, VEMBAKOTTAI TALUK, VIRUDHUNAGAR DISTRICT ON 06.06.2023, 11.00 A.M AT LORD P.C.ARUNACHALANADAR AAUDAITHAIYAMMAL THIRUMANA MAHAL, DOOR NO. 1210, POOLAVORANI VILLAGE, SIVAKASI TALUK, VIRUDHUNAGAR DISTRICT**

**Present:**

**Thiruvalargal:**

| | | | |
|---|---|---|---|
| 1 | T. Anitha | : | Revenue Divisional Officer/<br>Sub-Divisional Magistrate,<br>Sattur. |
| 2 | G. Ramaraj | : | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Virudhunagar. |
| 3 | D.M. Krishnababu | : | Assistant Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Virudhunagar. |
| 4 | R. Renganathan | : | Tahsildar,<br>Vembakottai Taluk,<br>Virudhunagar. |

Public, Project proponent 74 Nos (List enclosed)

The public hearing under EIA Notification, 2006 for the proposed project of M/s. K. Sugan Rough Stone and Gravel Quarry, SF.No. 902/1 & 903/1, Nathikudi Village, Vembakottai Taluk, Virudhunagar District was conducted at Lord P.C. Arunachalanadar – Aavudaithaiyammal Thirumana Mahal, Door No. 1210, Poolavurani Village, Sivakasi Taluk, Virudhunagar District. The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar welcomed the Revenue Divisional Officer/Sub-Divisional Magistrate, Sattur, other government officials, all general public and project proponents who have attended the public hearing. He informed that the public notices informing the

conduct of Public Hearing was published in "Dinakaran" and "The New Indian Express" on 27.04.2023. He also informed that vide publicity was given about the conduct of public hearing by circulating phamlets in the nearby villages of the project site. Further, he stated that the arrangements for the public hearing had been done as per the guidelines issued under EIA Notification, 2006. Subsequently, the District Environmental Engineer stated that the project proponent will make a detailed presentation on the proposed project and requested the public to express their views after completion of the presentation. He added that the written complaints would also be received.

He also stated that the views, suggestions and queries of the public will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority, Tamilnadu.

The Revenue Divisional Officer/Sub-Divisional Magistrate, Sattur initiated the Public Hearing process. After that, the District Environmental Engineer requested the project proponent to explain about their proposed project.

Then, the Environmental consultant of the project has made detailed presentation on the project of M/s K.Sugan Rough Stone and Gravel Quarry to the public along with Environmental Management Plan.

After that, the public has furnished their views with respect to the project as follows –

**Thiru.R.Pandi, President, Mamsapuram Primary Agricultural Co-operative Credit Union:**

Thiru.R.Pandi informed that Sengulam kanmoi, residential plots and meichal purambokku lands are located near to the proposed quarrying site. Further, informed that already there are many quarries in Nathikudi village and air pollution, noise pollution and vibrations in nearby houses are created due to blasting operations in those quarries. If permission is granted to this quarry, it will affect the livelihood of people and informed that scarcity of water and food will happen since the project site is located near agricultural land. He also stated that the quarries shall give compensation of Rs. 30 lakhs to each houses for the damages caused due to their operation and requested to give preference to agricultural and livelihood of people instead of quarries. Finally, he registered his opposition for the establishment of the proposed quarry and requested not to grant permission.

**Tmt.Guruvammal, Nathikudi:**

Tmt.Guruvammal informed that stone crushers and quarries are functioning for the past 20-25 years in the Nathikudi village and there is no impact due to their operation. Further, she

requested to grant permission to the quarry as the village has obtained benefits and safety due to the quarrying activity.

**Tmt.Santhanamary, Nathikudi:**

Tmt.Santhanamari stated that her mother's house has got damaged due to the blasting operation in quarry and opposed the project.

**Thiru.Sonamuthu, Nathikudi:**

Thiru.Sonamuthu informed that quarries are using more explosives than the permitted limit and this village may be called as "Nathikudi Quarry" instead of "Nathikudi Village" and it will be good if not granted permission to quarry. He further stated that the nearby habitants only will get affected much due to the operation of quarry and if permission is granted to this quarry, many such quarries will come in this area and registered that it will be good if not granted permission to this quarry.

**Thiru. S.Ganesan, Malli:**

Thiru. S.Ganesan informed that he is the native of Nathikudi village and informed that the quarries are under operation in this area for more than 10-15 years and there is no impact due to their operations. Further he added that nearby people will get employment opportunity and the panchayat will get tax revenue if permission is granted to this quarry.

**Thiru. Azhagumalai, Subramaniyapuram:**

Thiru. Azhagumalai informed that quarries are there in this area for more than 10 - 15 years and welcomed the project. Further, he added that village will develop due to this business and registered his support.

**Thiru. Vigneshwaran, Nathikudi:**

Thiru. Vigneshwaran informed that there are many quarries existing around the proposed quarry and his house is also located nearby and told that there is no impact and also added that it will be good if new technologies shall be followed for quarrying instead of old technologies.

**Thiru. Muthuramalingam, Nathikudi:**

Thiru. Muthuramalingam informed that his land is located adjacent to the quarry site at S.F. No. 902/2 and requested the officials to inspect the site because there is no sand or gravel available at the site.

**Thiru. Balachandar, Chennai:**

Thiru. Balachandar informed that he is an engineering student studying mining related course in Anna University, Chennai and told that there will be four types of impacts due to the quarrying activity such as noise, flying of stones during blasting, dust generation and vibrations. He requested that the quarry owner shall take measures to control all the said impacts and informed that this can be controlled by using new technologies and doing water spraying before and after blasting and by adopting muffle blasting.

**Thiru. Rajeswaran, Social Activist, Poolavurani:**

Thiru. Rajeswaran stated that meetings are being conducted for granting permission to quarry; but once the quarries come to operation, petition related to operation of quarries are not redressed. Traffic congestion and accidents are happening due to the operation of quarries. Further, he stated that the quarry owners are not doing any good things to this area from their profits and they are not following the rules and regulations once they come into operation and hence requested to implement schemes for the well being of public and opposed the quarry.

**Thiru. Balaji, Ettakkapatti:**

Thiru. Balaji informed that State Environment Impact Assessment Authority is insisting safety distance required between the quarry and firework industries should be 300 m; but as per the rules of Petroleum Explosive Safety Organisation, it is enough to have 71 m as safety distance for fireworks.

**Tmt. Maruthammal, Nathikudi:**

Tmt. Maruthammal informed that her age is 67 and told that there are around 50 – 60 houses near to the quarry and heavy noise and vibrations are happening during blasting operation. Further, she added that stone and sand are falling nearer to their houses and hence requested that the quarries shall function without noise and vibration and told not to grant permission to new quarries. She also recorded that there are no impacts due to existing quarries and also requested to establish more industries in this area.

**Thiru. Palanisamy, Alangulam:**

Thiru. Palanisamy informed that new technologies have arrived for blasting operations and vibrations will not arise if the quarries use those technologies. Further, reported that no water scarcity arises in his land located near to M/s. Tamilnadu Cements Ltd limestone mines and hence requested to give cooperation for operating quarries and also requested the quarry

owners to operate their quarries by appointing mine managers and carrying out safety precautions.

**Thiru. Muniselvam, Nathikudi:**

Thiru. Muniselvam informed that the quarries in this area are using explosives more than the permitted limit for blasting and the people living nearby the quarries are getting affected much and hence requested not to grant permission to the quarry.

**Thiru. Narayanaperumalsamy, Secretary, Virudhunagar District Quarry Owners Association:**

Thiru. Narayanaperumalsamy informed that people are important and they will get benefitted only if the industries and business are operated. Further, he added that, the Tamil Nadu Mines Act mandated the safety distance between quarry and the habitation as 300 m and all the Association members were instructed to use explosives which create less noise and vibrations. He also informed that they are paying 70% of their profits as tax to Government and requested the public to give cooperation for establishing new quarries.

**Thiru. Asan Ali, Chennai:**

Thiru. Asan Ali stated that, in the mining plan of the proposed quarry, it is proposed that they will use only less amount of explosives and shall use new technologies. There will not be any impact if the proposed actions are properly followed. Further, he added that vibrations may be controlled by establishing small pit at the end of mining site and the fly stones can be controlled by adopting muffle blasting.

**Thiru. Arivazhagan, Thiruvenkadapuram:**

Thiru. Arivazhagan informed that there are 300 people depending on the quarry jobs for the past 30 years and there is no impact and the quarries are carrying out the blasting with all safety precautions.

**Thiru. Ramar, Subramaniyapuram:**

Thiru. Ramar informed that river sand is in scarcity now and M-sand is the alternative to river sand and hence requested to grant permission to this project.

**Thiru. Marimuthu, Nathikudi:**

Thiru. Marimuthu informed that the Nathikudi village exists since 2$^{nd}$ century AD and there are approximately 700 Acres of tharisu land in this village and the quarrying activity was the livelihood of people when the people break the stone by hand and now everything

becomes mechanised in quarries. Further, added that already these quarries are extracting more minerals than the permitted quantity and due to the operation of quarries, children are suffering with memory problem and heart diseases and requested not to grant permission to the quarry even if single person gets affected. He also informed that he is objecting only this quarries and registered his strong opposition and also reported that he is about to file court case regarding excessive blasting and informed that protest will be done if permission granted to this project.

**Thiru. Balaji, Alamarathupatti:**

Thiru. Balaji informed that he is carrying out both quarry and fireworks manufacturing and both are categorised as Red by the Pollution Control Board and requested that the fireworks needs to be considered as industrial activity and shall not consider as habitation while granting permission. He further added that permission shall be granted by considering suitable safety distance between quarry and fireworks industries.

After that, since no one came forward to give view on the project, the Revenue Divisional Officer/Sub-Divisional Magistrate, Sattur invited the public to offer their further more views if any. Even after that, no one came forward to give any opinion. Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar has narrated the proceedings of the public hearing conducted. He also thanked all and requested to furnish their views if any in written and 34 numbers of petitions were received in person and through online.

With this, the meeting came to the end.

7.6.2023
District Environmental Engineer,
Tamilnadu Pollution Control Board,
Virudhunagar

07/06/23
Revenue Divisional Officer /
Sub-Divisional Magistrate,
Sattur

Enclosures:

1. Copy of Attendance Register (Total 6 – pages, 74 persons)
2. Video graph of public hearing meeting (CD format)
3. Copy of Public Notices (both Tamil & English).

விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை வட்டம், நதிக்குடி கிராமத்தில் புல எண். 902/1 மற்றும் 903/1 - ல் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். கே . சுகன் உடைகல் மற்றும் கிராவல் குவாரி தொடர்பாக 06.06.2023 முற்பகல் 11.00 மணியளவில் விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், பூலாவூரணி கிராமம், கதவு எண்: 1210 ல் உள்ள தி/ள். லார்டு பி.சி. அருணாச்சலநாடார் ஆவுடைத்தாயம்மாள் திருமண மண்டபத்தில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் குறிப்புகள்.

பங்கேற்றோர்:

| | | | |
|---|---|---|---|
| 1 | திருமதி. த.அனிதா | : | வருவாய் கோட்டாட்சியர்,<br>சாத்தூர். |
| 2 | திரு. கு. இராமராஜ் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம்,<br>விருதுநகர். |
| 3 | திரு. து.மு. கிருஷ்ணபாபு | : | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம்,<br>விருதுநகர். |
| 4 | திரு. இரா. ரெங்கநாதன் | : | வட்டாசியர்,<br>வெம்பகோட்டை வட்டம்,<br>விருதுநகர். |

பொதுமக்கள் மற்றும் தொழிற்சாலை பிரதிநிதிகள் 74 நபர்கள் (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது)

விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை வட்டம், நதிக்குடி கிராமத்தில் புல எண். 902/1 மற்றும் 903/1 - ல் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். கே . சுகன் உடைகல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்திற்கு, சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கையின் கீழ் சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்காக, அப்பகுதி பொது மக்களின்

கருத்தினை அறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், பூலாவூரணி கிராமம், கதவு எண்: 1210 ல் உள்ள தி/ள். லார்டு பி.சி. அருணாச்சலநாடார் ஆவுடைத்தாயம்மாள் திருமண மண்டபத்தில் 06.06.2023 அன்று முற்பகல் 11.00 மணியளவில் துவங்கியது. மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம், விருதுநகர் அவர்கள் கூட்டத்திற்கு வருகை புரிந்த வருவாய் கோட்டாட்சியர், ஏனைய அரசு அதிகாரிகள், பொதுமக்கள் மற்றும் தொழிற்சாலையின் பிரதிநிதிகள் அனைவரையும் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விபரம் குறித்து ஏற்கனவே "தினகரன்" மற்றும் "தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் 27.04.2023 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். இப்பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்துவது தொடர்பாக பொதுமக்களுக்கு துண்டு பிரசுரங்கள் மூலம் விரிவாக விழிப்புணர்வு மற்றும் அறிவிப்பு செய்ததைக் கூறினார். இந்த கூட்டத்திற்கான ஏற்பாடுகள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கை 2006ல் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

இத்திட்டம் தொடர்பாக தொழிற்சாலை பிரதிநிதி விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் தங்களது கருத்துக்களை வழங்கலாம் என கேட்டுக்கொண்டார். எழுத்துப்பூர்வமாக விண்ணப்பங்கள் வழங்க விரும்புபவர்களும் அதனை வழங்கலாம் என தெரியப்படுத்தினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக நடைபெறும் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கைகள் வீடியோகிராபி மூலம் பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் குறிப்புகளுடன் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் எனத் தெரிவித்தார்.

பிறகு, வருவாய் கோட்டாட்சியர், சாத்தூர் அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தினை துவக்கி வைத்தார். பின்பு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,

தொழிற்திட்டம் குறித்து விளக்குமாறு தொழிற்சாலை பிரதிநிதியைக் கேட்டுக்கொண்டு, அதன்பின் பொதுமக்கள் தங்கள் கருத்துகளைத் தெரிவிக்கலாம் என்று கூறினார்.

அதன்பின் தி/ள். கே . சுகன் உடைகல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் ஆலோசகர், இத்திட்டம் தொடர்பாகவும் மற்றும் இது தொடர்பான சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் விளக்கவுரையாற்றினார்.

பின்னர், இக்கூட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட தொழிற்திட்டம் குறித்து வாய்மொழியாக பொதுமக்களால் வழங்கப்பட்ட கருத்துக்கள் பின்வருமாறு:

**திரு.ஆர்.பாண்டி, தலைவர், மம்சாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் :**

திரு.ஆர்.பாண்டி அவர்கள், உத்தேசிக்கப்பட்டுள்ள குவாரி இடத்துக்கு அருகில் செங்குளம் கண்மாய் வீட்டுமனை மற்றும் மேய்ச்சல் புறம்போக்கு நிலங்கள் உள்ளன எனக்கூறினார். மேலும், நதிக்குடி கிராமத்தில் ஏற்கனவே பல குவாரிகள் இருக்கின்றன எனவும், அவற்றில் உபயோகப்படுத்தப்படும் வெடியினால் அதிக காற்று மாசு மற்றும் அதிகமான ஒலி ஏற்படுவதாகவும், வீடுகளில் அதிர்வு ஏற்படுவதாகவும் கூறினார். இங்கு குவாரிக்கு அனுமதி அளித்தால் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் எனவும், நிலத்தடி நீர் தட்டுப்பாடு மற்றும் விவசாய நிலங்கள் அருகில் இருப்பதால் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் எனவும் தெரிவித்தார். குவாரி செயல்பாட்டினால் ஏற்படும் பாதிப்புகளுக்கு இழப்பீடாக குவாரிகள் அங்குள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் ரூ.30/- லட்சம் வழங்க வேண்டுமெனவும், குவாரிகளுக்கு பதில் விவசாயத்திற்கும், பொது மக்களின் வாழ்வாதாரத்திற்கும் முன்னுரிமை வழங்க வேண்டுமென கேட்டுக்கொண்டார். கடைசியாக, குவாரி அமைப்பதற்கு தனது எதிர்ப்பை பதிவு செய்வதாகத் தெரிவித்து, இக்குவாரிக்கு அனுமதி வழங்கக் கூடாது என கூறினார்.

**திருமதி.குருவம்மாள், நதிக்குடி:**

திருமதி குருவம்மாள்அவர்கள், நதிக்குடி கிராமத்தில் கடந்த 20-25 வருடங்களாக கல் உடைக்கும் தொழிற்சாலைகளும், குவாரிகளும் இயக்கத்தில் இருந்து வருவதாகவும், அவற்றால் எவ்வித பாதிப்பும் இல்லை எனக்கூறினார். மேலும், இத்தொழில்களினால் நதிக்குடி கிராமத்திற்கு பயனும், பாதுகாப்பும் கிடைத்திருப்பதாகவும் தெரிவித்து, குவாரிக்கு அனுமதி வழங்க வேண்டினார்.

**திருமதி.சந்தனமாரி, நதிக்குடி:**

திருமதி. சந்தனமாரி அவர்கள், குவாரி வெடி வெடிப்பின் காரணமாக தனது அம்மாவின் வீடு இடிந்து விட்டதாகவும், குவாரி எதுவும் வேண்டாம் எனவும் கூறினார்.

**திரு.சோனமுத்து, நதிக்குடி :**

திரு.சோனமுத்து அவர்கள், குவாரிகளில் அளவுக்கு அதிகமாக வெடி உபயோகப்படுத்துவதாக தெரிவித்தார். மேலும், நதிக்குடி கிராமம் என்று அழைப்பதற்கு பதிலாக நதிக்குடி குவாரி என்று அழைக்கலாம் என்றும், குவாரிக்கு அனுமதி கொடுக்காமல் இருந்தால் நல்லது எனவும் தெரிவித்தார். மேலும், கல் குவாரி செயல்பாட்டால் அருகில் குடியிருப்பவர்களுக்கே அதிக பாதிப்பு ஏற்படுகிறது எனவும் கூறினார். இந்த குவாரிக்கு அனுமதி வழங்கினால், தொடர்ந்து கல்குவாரிகள் வரும். எனவே, அனுமதி வழங்காமல் இருந்தால் நல்லது என்றார்.

**திரு.எஸ்.கணேசன், மல்லி**

திரு.கணேசன் அவர்கள், தான் நதிக்குடி கிராமத்தை பூர்விகமாக கொண்டவர் என்றும், அங்கு 10-15 வருடங்களுக்கு மேலாக குவாரிகள் இயக்கத்தில் இருந்து வருகின்றன என்றும், அதனால் பாதிப்பு ஏதும் இல்லை எனவும் கூறினார். மேலும், குவாரிக்கு அனுமதி அளித்தால்

அருகிலுள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பும், ஊராட்சிக்கு வரி வருவாயும் கிடைக்குமென தெரிவித்தார்.

**திரு.அழகுமலை, சுப்பிரமணியபுரம்**

திரு.அழகுமலை அவர்கள், இங்கு 10-15 வருடங்களுக்கு மேலாக குவாரிகள் உள்ளதாகவும், தொழில் நடைபெற்றால் நல்லது எனவும், இதனால் ஊர் மற்றும் பஞ்சாயத்து வளர்ச்சியடையும் எனக் கூறினார். மேலும், தொழில் வளர்ச்சிக்கு ஆதரவு என்றார்.

**திரு.விக்னேஷ்வரன், நதிக்குடி**

திரு.விக்னேஷ்வரன் அவர்கள், குவாரி உத்தேசிக்கப்பட்டுள்ள இடத்தை சுற்றி ஏற்கனவே பல குவாரிகள் உள்ளதாகவும், தனது வீடும் அருகிலேயே இருப்பதாகவும் கூறினார். எந்த பாதிப்பும் இல்லை என்றார். குவாரி செயல்பாட்டில் பழைய தொழில் நுட்பங்களுக்கு பதில், புதிய தொழில் நுட்பங்களை பயன்படுத்தினால் நன்றாக இருக்கும் எனத் தெரிவித்தார்.

**திரு.முத்துராமலிங்கம், நதிக்குடி:**

திரு.முத்துராமலிங்கம் அவர்கள், தனது நிலம் உத்தேசிக்கப்பட்டுள்ள குவாரி இடத்தை ஒட்டி, புல எண் : 902/2 ல் அமைந்துள்ளது எனவும், அங்கு அதிகாரிகள் ஆய்வு செய்ய வேண்டும் எனவும், அவ்விடத்தில் மணல், கிராவல் ஏதும் இல்லை எனவும் கூறினார்.

**திரு.பாலசந்தர், சென்னை:**

திரு.பாலசந்தர் அவர்கள், தான் சென்னை அண்ணா பல்கலைகழகத்தில் சுரங்கம் தொடர்பான பொறியியல் பட்டப்படிப்பு படித்து வரும் மாணவன் எனக் கூறினார். குவாரி செயல்பாட்டின் போது அதிக சத்தம், வெடி வெடிக்கும் போது பறக்கும் கற்கள், தூசி பறத்தல் மற்றும் அதிர்வுகள் ஆகிய பாதிப்புகள் ஏற்படும் என்றும், குவாரி உரிமையாளர் இந்த நான்கு பாதிப்புகளையும் கட்டுப்படுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். குவாரி செயல்பாட்டில்

புதிய தொழில்நுட்பங்களை உபயோகப்படுத்தினால் இப்பாதிப்புகளை கட்டுப்படுத்தலாம் என்றும், வெடி வெடிப்பதற்கு முன்னும் பின்னும் தண்ணீர் தெளித்தல் மற்றும் மூடி வெடிக்கும் முறை ( Muffle blasting ) ஆகியவற்றை பயன்படுத்துவதன் மூலம் தூசி மற்றும் பறக்கும் கற்களை கட்டுப்படுத்தலாம் எனவும் கூறினார்.

**திரு.ராஜேஸ்வரன், சமூக ஆர்வலர், பூலாவூரணி:**

திரு.ராஜேஸ்வரன் அவர்கள், குவாரி அனுமதி பெறுவதற்கான கூட்டம் நடத்தப்படுகிறது. ஆனால் குவாரி செயல்பாட்டிற்கு வந்த பின் எத்தனை மனுக்கள் கொடுத்தாலும் பிரச்சனைகள் சரியாவது இல்லை எனக் கூறினார். குவாரி செயல்பாட்டால் போக்குவரத்து நெரிசல் மற்றும் விபத்துக்கள் ஏற்படுகின்றன என்றும், குவாரி உரிமையாளர்கள் தங்களுடைய லாபத்தில் இருந்து தனிப்பட்ட முறையில் இந்த பகுதிக்கென எவ்வித நன்மைகளும் செய்வதில்லை எனவும் கூறினார். திட்டம் செயல்பாட்டிற்கு வந்த பின் சட்ட திட்டங்களை குவாரிகள் பின்பற்றுவதில்லை எனத் தெரிவித்தார். மக்களுக்கு நலன் தரும் திட்டங்களை செயல்படுத்த வேண்டுமென கேட்டுக் கொண்டார். குவாரி வேண்டாம் என்றார்.

**திரு.பாலாஜி, எட்டக்கப்பட்டி:**

திரு.பாலாஜி அவர்கள், "மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையமானது", குவாரி மற்றும் பட்டாசு தயாரிக்கும் தொழிற்சாலைக்கிடையே 300 மீட்டர் இடைவெளி இருக்க வேண்டுமென கூறுவதாகவும், ஆனால் பெட்ரோலியம் மற்றும் வெடிபொருள் பாதுகாப்பு துறை ( PESO ) விதிகளின் படி 71 மீட்டர்கள் இருந்தாலே போதும் எனவும் கூறினார்.

**திருமதி.மருதம்மாள், நதிக்குடி:**

திருமதி.மருதம்மாள் அவர்கள், தனக்கு 67 வயதாகுவதாகவும், குவாரிக்கு அருகில் 50 முதல் 60 வீடுகள் இருப்பதாகவும், குவாரியில் வெடி வெடிக்கும் பொழுது வீடுகளில் அதிர்வு மற்றும் அதிக சத்தம் ஏற்படுவதாகவும் கூறினார். மேலும், குவாரியிலிருந்து கல், மண்

விழுகிறது. சத்தம் மற்றும் அதிர்வு ஏற்படாதவாறு குவாரிகள் செயல்பட வேண்டும் எனவும், புதிய குவாரிகளுக்கு அனுமதி அளிக்க கூடாதெனவும் கேட்டுக் கொண்டார். பழைய குவாரிகளினால் பாதிப்பு ஏதும் இல்லை. மேலும், புதிய தொழிற்சாலைகளை இப்பகுதியில் அமைக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

**திரு.பழனிச்சாமி, ஆலங்குளம்:**

திரு.பழனிச்சாமி அவர்கள், வெடி வெடிப்பதற்கு பல புதிய தொழில் நுட்பங்கள் வந்துவிட்டன என்றும், அவற்றின் பயன்பாட்டால் அதிர்வுகள் ஏதும் ஏற்படாது எனக் கூறினார். மேலும், தி/ள்.தமிழ்நாடு சிமெண்டஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு அருகிலுள்ள அவரது நிலத்தில் நிலத்தடி நீர் பற்றாக்குறை ஏற்படவில்லை எனவும், அதனால் குவாரி செயல்படுவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார். மேலும், குவாரி உரிமையாளர்கள் முறையாக "சுரங்க மேலாளர்" நியமித்தல் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு செயல்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

**திரு.முனிசெல்வம், நதிக்குடி:**

திரு.முனிசெல்வம் அவர்கள், இப்பகுதியில் உள்ள குவாரிகள் அரசு அனுமதியை விட அதிகமாக வெடியை உபயோகப்படுத்துவதாகவும், குவாரிக்கு அருகில் உள்ளவர்களே அதிகம் பாதிப்படைவதாகவும் தெரிவித்தார். மேலும், குவாரிக்கு அனுமதி அளிக்க வேண்டாம் எனவும் கேட்டுக் கொண்டார்.

**திரு.நாராயணபெருமாள்சாமி, செயலாளர், விருதுநகர் மாவட்ட குவாரி உரிமையாளர் சங்கம்:**

திரு.நாராயணபெருமாள்சாமி அவர்கள், பொதுமக்கள் தான் இன்றியமையாதவர்கள் என்றும், தொழில் நடந்தால் தான் பொதுமக்கள் நன்மையடைவார்கள் எனவும் கூறினார். தமிழ்நாடு அரசு சுரங்க விதிகளின் படி, குவாரிகளில் இருந்து குடியிருப்புகளுக்கு 300 மீட்டர் இடைவெளி இருக்க வேண்டுமென இருப்பதாக தெரிவித்தார். மேலும், அதிக சத்தம் மற்றும்

அதிர்வுகள் இல்லாத வெடிகளை உபயோகப்படுத்த வேண்டும் என தங்கள் சங்க உறுப்பினர்களை அறிவுறுத்தி உள்ளோம் என்றும், தங்கள் லாபத்தில் 70% அளவிற்கு அரசிற்கு வரியாக செலுத்துவதாகவும் தெரிவித்தார். புதிய குவாரிகள் தொடங்க மக்கள் ஒத்துழைப்பு தர வேண்டும் என்றார்.

**திரு.அசன் அலி, சென்னை:**

திரு.அசன் அலி அவர்கள், இக்குவாரியின் "சுரங்க திட்டத்தின்" படி மிகக் குறைந்த அளவே வெடி உபயோகம் இருக்கும் என்றும், புதிய தொழில் நுட்பங்களை "சுரங்க திட்டத்தில்" பயன்படுத்துவோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும், அதை முறையாக பின்பற்றினால் பாதிப்பு ஏதும் இருக்காது எனவும் கூறினார். மேலும், சுரங்க பகுதியின் முடிவில் சிறிய பள்ளம் அமைப்பதன் மூலம் அதிர்வுகளை தடுக்க இயலும் என்றும், மூடி வெடிக்கும் முறை (Muffle blasting) மூலம் பறக்கும் கற்களை தடுக்க இயலும் என்றும் கூறினார்.

**திரு.அறிவழகன், திருவெங்கடபுரம்:**

திரு.அறிவழகன் அவர்கள், கடந்த 30 வருடங்களாக குவாரி தொழிலை நம்பி 300 பேர் இருப்பதாகவும், இதனால் பாதிப்பு ஏதும் இல்லை என்றும், குவாரியில் தக்க பாதுகாப்போடு தான் வெடி வைக்கிறார்கள் என்றும் தெரிவித்தார்.

**திரு.இராமர், சுப்பிரமணியபுரம்:**

திரு.இராமர் அவர்கள் தற்பொழுது ஆற்று மணல் சரியாக கிடைக்கவில்லை, அதற்கு மாற்றாக எம.சாண்ட் தான் உபயோகப்படுத்தப்பட்டு வருவதாகவும், ஆகையால் இத்திட்டத்திற்கு அனுமதி அளிக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

**திரு. மாரிமுத்து, நதிக்குடி:**

திரு. மாரிமுத்து அவர்கள், நதிக்குடி ஊரானது கி.பி.2 ஆம் நூற்றாண்டிலேயே உருவான ஊர் எனவும், இங்கு ஏறக்குறைய 700 ஏக்கர் தரிசு நிலங்கள் இருப்பதாகவும் கூறினார். மேலும், கையினால் கல் உடைத்த காலத்தில் இது வாழ்வாதாரமாக இருந்ததாகவும், தற்பொழுது குவாரியில் அனைத்தும் இயந்திரமயமாகி விட்டது எனவும் கூறினார். ஏற்கனவே உள்ள குவாரிகளில் அளவுக்கதிகமாக கற்களை தோண்டி எடுப்பதாகவும், குவாரி செயல்பாட்டால் குழந்தைகளுக்கு ஞாபகமறதி மற்றும் இருதய நோய்கள் ஏற்படுவதாகவும் கூறினார். திட்டத்தினால் ஒருவருக்கு பாதிப்பு என்றாலும் அதற்கு அனுமதி அளிக்கக் கூடாது எனவும், இந்த குவாரியை தடை செய்ய வேண்டும் மற்றும் இந்த குவாரிக்கு மட்டும் தான் எதிர்ப்பு என்றும் கூறினார். குவாரிகளில் அதிக வெடி வைத்தால் வழக்கு தொடர இருப்பதாகவும் கூறினார். கடைசியாக, இந்த திட்டத்திற்கு அனுமதி அளித்தால் கடுமையான போராட்டம் நடைபெறும் எனவும் தெரிவித்தார்.

**திரு.பாலாஜி, ஆலமரத்துப்பட்டி:**

திரு.பாலாஜி அவர்கள், தான் குவாரி மற்றும் பட்டாசு தயார் செய்யும் தொழில் இரண்டும் செய்வதாக கூறினார். மேலும், மாசு கட்டுப்பாடு வாரியத்தால் இரண்டு வகை தொழில்களும் சிவப்பு வகையிலேயே வகைப்படுத்தப்பட்டுள்ளது என்றும், குவாரிக்கு அனுமதி அளிக்கும் பொழுது பட்டாசு தொழிற்சாலைகளை தொழிற்சாலையாகவே கருத வேண்டும் எனவும், குடியிருப்பு பகுதி போல கருதக் கூடாது எனவும் கேட்டுக் கொண்டார். மேலும், கூறுகையில், குவாரி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளுக்கு இடையே தகுந்த பாதுகாப்பு இடைவெளி விட்டு அனுமதி அளிக்க வேண்டும் என்றார்.

இதன் பின்பு, இத்திட்டம் தொடர்பாக கருத்துக்கூற வேறு யாரும் முன்வராததால், வருவாய் கோட்டாட்சியர் அவர்கள், மேலும் கருத்துகள் ஏதும் இருக்கிறதா என்று

வினவினார். அதன் பின்பும் பொதுமக்களிடமிருந்து கருத்துகள் ஏதும் வரவில்லை. இறுதியில், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், விருதுநகர் அவர்கள் இதுவரை நடந்ததை தொகுத்துக் கூறி கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார். மேலும், எழுத்துப்பூர்வவமான கருத்துக்கள்/மனுக்கள் ஏதும் இருப்பினும் வழங்கலாம் எனத் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து, நேரடியாகவும், இணையதளம் மூலமாகவும் 34 மனுக்கள் பெறப்பட்டன.

அத்துடன் பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் நிறைவு பெற்றது.

7.6.2023
மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
விருதுநகர்

வருவாய் கோட்டாட்சியர்
சாத்தூர்

இணைப்புகள்:

1. வருகைப்பதிவேடு நகல் (மொத்தம் 6 - பக்கங்கள், 74 நபர்கள்)
2. பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் வீடியோ (ஒலி மற்றும் ஒளி) பதிவு.
3. பத்திரிக்கை செய்தி நகல்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).